No. of Printed Pages : 12 Mar-2015 4048863 **4713**

பதிவு எண்
Register Number

## PART - III

# வணிகவியல் / COMMERCE

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Versions)

நேரம் : 3 மணி ]
Time Allowed : 3 Hours ]

[ மொத்த மதிப்பெண்கள் : 200
[Maximum Marks : 200

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use Black or Blue ink to write and pencil to draw diagrams.

### பகுதி-அ / PART - A

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க. **40x1=40**
**Note :** Answer **all** the questions.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
Choose the correct answer :

1. பின்வரும் சிறப்பியல்புகளில் எது தனி வணிகருக்கு ஏற்றதல்ல ?
   (அ) தனி நபர் உரிமை
   (ஆ) தனி மனித கட்டுப்பாடு
   (இ) எல்லா இலாபமும் வணிகருக்கே
   (ஈ) நெகிழ்ச்சி தன்மையற்றது

   Which among the following is not the characteristics of sole proprietorship ?
   (a) Single ownership
   (b) One Man Control
   (c) Whole profit to proprietorship
   (d) Non-flexibility

www.maduraicommerce.com [ திருப்புக / Turn over

2. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு :

(அ) தனி வணிகர் (ஆ) கூட்டாண்மை

(இ) கூட்டுப்பங்கு நிறுமம் (ஈ) இந்துக் கூட்டுக் குடும்பத் தொழில்

Registration is compulsory in the case of :

(a) A Sole trader (b) A Partnership

(c) A Joint stock company (d) A Joint Hindu family business

3. தனியாள் வணிகரின் பொறுப்பு :

(அ) முதலுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது

(ஆ) சொத்துக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது

(இ) வரையறை இல்லாதது

The liability of a sole trader is :

(a) Limited only to his investment in the business

(b) Limited to total property of the business

(c) Unlimited

4. ''மனிதர்கள் குழுக்களாக இணைந்து முதல் அல்லது பணியினை இட்டு ஏதேனும் தொழில் மேற்கொண்டால் அது கூட்டாண்மை நிறுவனம் எனப்படும்'' இவ்வரைவிலக்கணத்தைக் கூறியவர் :

(அ) பேராசிரியர் எல்.எச்.ஹானி

(ஆ) முனைவர் வில்லியம்ஸ் ஸ்பிரிகெல்

(இ) கிம்பால் மற்றும் கிம்பால்

"A partnership or firm is a group of men who have joined capital or services for prosecuting of some business". This is defined by :

(a) Prof. Haney

(b) Dr. William R. Spriegel

(c) Kimball and Kimball

5. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது :

(அ) ஒப்பந்தத்தால்

(ஆ) கூட்டாளிகளிடையே உறவு

(இ) அரசின் வழிகாட்டல்

A partnership is formed by :

(a) Agreement

(b) Relationship among persons

(c) The direction of government

www.maduraicommerce.com

6. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை A (Table A) என்பது :
(அ) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி
(ஆ) இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரி
(இ) நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி
(ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி
Table A of the Companies Act is a :
(a) Model Minutes Book
(b) Model form of Balance Sheet
(c) Model of Articles of Association
(d) Model of Memorandum of Association

7. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் என்பார், அதன் :
(அ) கடனாளர்கள் (ஆ) உறுப்பினர்கள்
(இ) கடன் வாடிக்கையர் (ஈ) நிறுமத்தில் கடன்
Debenture holders of a Company are its :
(a) Creditors (b) Members
(c) Credit Customers (d) Borrowers

8. தனி வரையறை நிறுமத்தில் பங்குதாரரின் பொறுப்பு :
(அ) பங்குகளின் செலுத்தப் பெற்ற மதிப்பளவாகும்
(ஆ) பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும் மதிப்பளவாகும்
(இ) தனிப்பட்ட சொத்துக்களின் அளவாகும்
(ஈ) பங்குகள் மீது கோரப்பட்ட தொகை அளவாகும்
The liability shareholders of a Private Limited Company is limited to :
(a) the paid up value of the shares
(b) amount remaining unpaid on the shares
(c) the extent of private assets
(d) amount called up

9. __________ எண்ணிக்கைக்கு மிகாத பொது வரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர் இயக்குநர் பதவி வகிக்கலாம்.
(அ) 10 (ஆ) 15
(இ) 20 (ஈ) வரம்பில்லை
A person can hold directorship of not more than __________ Public Limited Companies.
(a) 10 (b) 15
(c) 20 (d) limitless


www.maduraicommerce.com

10. நிர்வாகத்தின் மிகு அதிகாரங்களைப் பெற்றிருக்கும் நபர் :

(அ) மேலாண்மை இயக்குநர் (ஆ) பொது மேலாளர்

(இ) மேலாளர் (ஈ) நிறுமச் செயலாளர்

Name the person, who is entrusted with substantial powers of management in a company.

(a) Managing Director (b) General Manager

(c) Manager (d) Company Secretary

11. கீழ்கண்ட நிறுமங்களுள் எது சட்டமுறைக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் ?

(அ) சட்டமுறை நிறுமங்கள்

(ஆ) தனிவரையறை நிறுமங்கள்

(இ) பொது வரையறை நிறுமங்கள்

(ஈ) பட்டய நிறுமங்கள்

Which of the following must hold a statutory meeting ?

(a) Statutory Companies

(b) Private Limited Companies

(c) Public Limited Companies

(d) Chartered Companies

12. இந்தியாவிலுள்ள ஏற்பிசைவு பெற்ற பங்கு மாற்றகங்களின் எண்ணிக்கை :

(அ) 20 (ஆ) 21

(இ) 22 (ஈ) 24

Number of recognised stock exchanges in India is :

(a) 20 (b) 21

(c) 22 (d) 24

13. எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர் :

(அ) காளை (ஆ) கரடி

(இ) கலைமான் (ஈ) முடவாத்து

An optimistic speculator is :

(a) Bull (b) Bear

(c) Stag (d) Lame duck

www.maduraicommerce.com

14. பங்கு மாற்றகம் இதில் ஈடுபட்டிருக்கிறது :

(அ) சரக்கு (ஆ) சேவை

(இ) நிதிப்பத்திரங்கள் (ஈ) நாட்டின் பணம்

Stock Exchanges deal in :

(a) Goods (b) Services

(c) Financial Securities (d) Country's Currency

15. பத்திரங்கள் ஒப்பந்த (ஒழுங்கு படுத்துதல்) சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு :

(அ) 1952 (ஆ) 1956

(இ) 1964 (ஈ) 1966

Securities Contract Regulation Act was passed in :

(a) 1952 (b) 1956

(c) 1964 (d) 1966

16. ஒரு கூட்டுறவு சிறப்பங்காடி அளிப்பது :

(அ) கடன் (ஆ) சேவை

(இ) சரக்குகள் (ஈ) ரொக்கம்

A co-operative supermarket supplies :

(a) Credit (b) Service

(c) Goods (d) Cash

17. மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படுவது ______________.

(அ) கிராமங்களில் (ஆ) மாவட்டத் தலைநகரங்களில்

(இ) மாநிலத் தலைநகரங்களில் (ஈ) நகர்புறங்களில்

Central co-operative bank is established at :

(a) Villages (b) District headquarters

(c) State headquarters (d) Urban areas

18. அரசு நிறுமத்தில் அரசு கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்சப் பங்கு முதல்:

(அ) 51% (ஆ) 60%

(இ) 75% (ஈ) 90%

In a government company the share capital of the government must not be less than :

(a) 51% (b) 60%

(c) 75% (d) 90%

www.maduraicommerce.com

19. __________ வயது பூர்த்தி செய்யாத நபரை இளவர் என்கிறோம்.

(அ) 15 (ஆ) 16

(இ) 17 (ஈ) 18

A minor is a person who has not completed __________ years of age.

(a) 15 (b) 16

(c) 17 (d) 18

20. பொதுக் கழகத்தின் நிர்வாகம் இதைப் பெற்றிருக்கிறது :

(அ) வரையறுக்கப்பட்ட சுதந்திரம்

(ஆ) செயல்பாட்டுச் சுதந்திரமின்மை

(இ) கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம்

(ஈ) வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்

In a public corporation the management has :

(a) Limited freedom

(b) No freedom of action

(c) Controlled freedom

(d) Unrestricted freedom of action

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

Fill in the blanks.

21. தொழில் அமைப்புகளில் மிகவும் பழமையானது __________.

The oldest form of Business Organisation is __________.

22. தொலை தூர ஒலிபரப்பு __________ அமைப்பின் கீழ் வருகிறது.

Broadcasting comes under __________ form of organisation.

23. __________ என்பது தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட கூட்டாண்மையாகும்.

__________ is a temporary partnership.

24. இந்தியாவில் கூட்டாளியின் பொறுப்பு __________.

The partners liability in India is __________.

www.maduraicommerce.com

25. அவசர காலங்களில் நிறுவனத்தின் நன்மைக்காக பயன்படுத்தும் உரிமைகளுக்கு ________ என்று பெயர்.

An ____________ authority is a right, vested with a partner to be used in emergency situations to protect the interest of the firm.

26. __________ அவர்கள் உலகிலேயே தனி நபர் கட்டுப்பாடுதான் சிறந்தது என்று கூறுகிறார்.

__________ has said that one-man control is the best in the world.

27. ஒரு பொது வரையறை நிறுமம் தனது கடனீட்டு பத்திரங்களை வாங்குமாறு பொதுமக்களிடம் அழைப்பு விடும் விளம்பரத்திற்கு பெயர் __________.

An advertisement inviting the public to buy the debentures of a public company is known as __________.

28. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் (Debenture - holders) என்பார், அதன் ________ ஆவார்.

Debenture holders of a company are its __________.

29. ஒரு பொது வரையறை நிறுமத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை __________.

The minimum number of members in a public limited company is ________.

30. இயக்குநர் நிறுமத்தின் ____________, பொறுப்புறுதியாண்மையராகவும், அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர்.

Directors act as ________ trustees and officers of the company.

31. நிறுமச் செயலர் ____________ நியமிக்கப்பெறுகிறார்.

A company secretary is appointed by __________.

32. ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவிக்கையை அனைத்து உறுப்பினர்களுக்கும் கூட்ட நாளுக்குக் குறைந்தது __________ நாட்களுக்கு முன்னதாக தரவேண்டும்.

The notice calling the Annual General Meeting, must be given to all its members at least __________ days before the date of the meeting.

www.maduraicommerce.com

www.maduraicommerce.com



33. ____________ -ஐ செலுத்தத் தவறுவதால், பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன.

Shares are forfeited for the non payment of ________.

34. பங்குகள் __________ உரிமையைக் குறிக்கும்.

Shares represent ___________ interest.

35. ஆயத்தக் கொடுப்பு ஒப்பந்தங்கள் __________ எனவும் அழைக்கப்படும்.

Ready delivery contracts are also called as __________.

36. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை __________.

The father of the co-operative movement was ____________.

37. கூட்டுறவு சங்கத்தில் மேலாண்மை _________ கொண்டது.

Management of a co-operative society is fully __________.

38. கூட்டாண்மை உடன்பாடு என்பது பேச்சளவிலோ அல்லது __________ வடிவத்திலோ இருக்கலாம்.

The partnership agreement may be oral or in _________.

39. ____________ என்பது அரசுக்கு சொந்தமானதாகவும் அதன் கட்டுப்பாட்டிற்குட்பட்டும் இயங்கும் தொழில் அமைப்பாகும்.

____________ is an undertaking owned and controlled by the government.

40. ஏற்கனவே தனியார் துறையில் இயங்கி வரும் தொழில்களை அரசு ஏற்று நடத்தினால் அதனை __________ எனலாம்.

When the government takes over an existing private concern, it is called ________.

## பகுதி-ஆ / PART - B

குறிப்பு : (i) **ஏதேனும் பத்து** வினாக்களுக்கு விடையளிக்க. **10x4=40**

(ii) ஒவ்வொரு வினாவிற்கும் **நான்கு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

Note : (i) Answer any **ten** questions.

(ii) Answer to each question should not exceed **four** lines.

**41.** அமைப்பை வரையறு.
Define organisation.

**42.** அரசுத் தொழில்களை எவ்வகையில் உருவாக்கலாம்?
How are state enterprises established ?

**43.** பன்னாட்டு நிறுமத்தின் எடுத்துக்காட்டு நான்கினைத் தருக.
Give four examples of multinational companies.

**44.** வரையறா பொறுப்பு என்றால் என்ன?
What is unlimited liability ?

**45.** கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்தபட்ச, அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?
What are the minimum and maximum number of members in a partnership firm ?

**46.** கூட்டாண்மை வரைவிலக்கணம் தருக.
Define partnership.

**47.** ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளை மறுவெளியீடு செய்தல் என்றால் என்ன?
What is meant by reissue of forfeited shares ?

**48.** அயல்நாட்டு நிறுமம் என்பதன் பொருள் யாது?
What is meant by foreign company ?

**49.** பகராள் என்றால் என்ன?
What is proxy ?

www.maduraicommerce.com

www.maduraicommerce.com


50. கூட்டத்தில் குறைவெண் (quorum) என்றால் என்ன?
What do you mean by quorum ?

51. பட்டியலிடுதல் என்றால் என்ன?
What is listing ?

52. செபி என்றால் என்ன?
What is SEBI ?

53. கூட்டுறவு பண்டகச்சாலை என்றால் என்ன?
What is a co-operative warehouse ?

54. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
Who are Rochdale Pioneers ?

55. இராணுவம் சார்ந்த தொழில்களுக்குத் துறைவாரி அமைப்பே சிறந்ததென எதனால் கூறப்படுகிறது?
Why is departmental organisation suitable for defence industries ?

## பகுதி-இ / PART - C

குறிப்பு : (i) **ஏதேனும் ஐந்து** வினாக்களுக்கு விடையளி. 5x8=40
(ii) ஒவ்வொன்றிற்கும் **ஒரு பக்க** அளவிற்கு மிகாமல் விடையளிக்கவும்.

Note : (i) Answer **any five** questions.
(ii) Answer to each question should not exceed **one** page.

56. சிறுகுறிப்பு வரைக.
(i) கட்டுப்பாட்டு வீச்செல்லை
(ii) கட்டளை ஒருமை
Write short notes on :
(i) Span of control
(ii) Unity of command

57. கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்யாமையின் குறைபாடுகள் யாவை?
What are the drawbacks of non-registration of a partnership firm ?

58. செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள் யாவை?
State briefly the contents of Articles of Association.

59. பங்குகளுக்கும் கடனீட்டுப்பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் எவையேனும் நான்கினைத் தருக.
Mention any four differences between shares and debentures.

60. ஒரு நிறுமத்தில் இயக்குநர் வகிக்கும் நிலையைச் சுருக்கிக் கூறுக.
Explain the position of a Director in a company.

61. பத்திரச் சந்தையை விவரி.
Describe Securities market.

62. கூட்டுறவு அமைக்கப் பின்பற்ற வேண்டிய முறைகளை விளக்குக.
What are the steps involved in forming a co-operative society ?

63. பொதுக் கழகத்தின் இயல்புகள் யாவை?
What are the features of a public corporation ?

## பகுதி-ஈ / PART - D

குறிப்பு : (i) **அனைத்து வினாக்களுக்கும்** விடையளிக்கவும். **4x20=80**
(ii) ஒவ்வொன்றிற்கும் **இருபக்க** அளவிற்கு மிகாமல் விடையளிக்கவும்.

Note : (i) Answer **all** the questions.
(ii) Answer to each question should not exceed **two** pages.

64. (அ) பன்னாட்டு நிறுமங்கள் பற்றி நீ அறிவது யாது? அதன் சிறப்பியல்புகள் பற்றி எழுதுக.

அல்லது

(ஆ) அரசுத் தொழில்களின் நோக்கங்களை விவரி.

(a) What do you understand by Multinational Companies and explain its features.

OR

(b) Explain the objectives of state enterprises.

www.maduraicommerce.com

65. (அ) தனிநபர் வணிகத்தின் ஏதேனும் பத்து குணாதிசயங்களை விளக்குக.

அல்லது

(ஆ) பங்கு மாற்றகம் வரைவிலக்கணம் தருக. பங்கு மாற்றகத்தின் இயல்புகளை விளக்குக.

(a) Explain any ten characteristics of sole trading form of organisation.

OR

(b) Define stock exchange. Explain its characteristics.

66. (அ) கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விளக்குக.

அல்லது

(ஆ) தனி நிறுமத்திற்கும் பொது நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகள் எவையேனும் பத்தினை அட்டவணைப்படுத்துக.

(a) What are the circumstances under which a partnership firm is dissolved ?

OR

(b) Tabulate any ten differences between Private Ltd. Companies and Public Ltd. Companies.

67. (அ) கூட்டுறவு அமைப்பின் ஏதேனும் பத்து முக்கிய சிறப்பியல்புகளை தெளிவாக விவரி.

அல்லது

(ஆ) இயக்குநருக்குரிய அதிகாரங்களையும் அவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளையும் விளக்குக.

(a) Explain clearly any ten important features of co-operative organisations.

OR

(b) Explain the powers of directors and restrictions placed on them.

www.maduraicommerce.com

-oOo-